# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி (தே.க.வ)

### 2010 ஓகஸ்ட் மாதத்திற்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல்

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரியைச் செலுத்தப் பொறுப்புடையவர்கள் 2010.09.30 ஆம் திகதி முடிவடைந்த காலாண்டிற்கான முதலாவது மாதாந்த தவணைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கான இறுதித் திகதி :

**2010.08.20**

(அ) ஏதேனும் பொருட்களை ஏதேனும் (விலக்களிக்கப்பட்ட பொருட்கள் தவிர) உற்பத்தி செய்யும் வியாபாரத்தினை நடத்தும் அல்லது

(ஆ) ஏதேனும் சேவைகளை (ஏதேனும் விலக்களிக்கப்பட்ட சேவைகள் தவிர) வழங்கும் வியாபாரத்தினை நடத்தும்.

ஒவ்வொரு ஆட்களும் (தனிநபர், கம்பனி, ஆட்களைக் கொண்ட குழு) அல்லது பங்குடமையும் **பொறுப்புடைய புரள்வில் 3% ஆக** தே.க.வ இனைச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லிருந்து தயாரிக்கப்பட்ட அரிசி விற்பனையின் புரள்விற்கு ஏற்புடையதான தே.க.வரி விகதிம் 2009.07.01 ஆம் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் 1.5% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. உரிய திருத்தங்கள் 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேச கட்டுமான வரிச்சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பு :

- பின்வரும் கூறுகள் பொறுப்புடைய புரள்வின் பகுதியாக இருக்கமாட்டாது.
  - பெ.சே. வரிக்கூறு ;
  - செலவிடப்பட்ட அறவிட முடியாக் கடன்கள் (எவ்வாறாயினும், ஏலவே பதிவழிப்புச் செய்யப்பட்ட அறவிட முடியாக் கடன்கள் பின்னர் அறவிடப்பட்டால் அவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்),
  - குறித்த காலாண்டில் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட உற்பத்தித் தீர்வை ஏதேனும்.
- இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருட்கள் ஏதேனும் (விலக்களிக்கப்பட்ட பொருட்கள் தவிர) பெறுமதி சேர் வரியின் நோக்கத்திற்கான பெறுமதிக்கு அமைவாக சுங்கத்தின் நிலையில் தே.க.வ செலுத்துவதற்கு கடப்பாடுடையதாகும். உற்பத்தி எதற்கும் உற்படாததினைத் தொடர்ந்து அத்தகைய பொருட்கள் விற்பனை செய்யப்படுமாயின் அத்தகைய பொருட்களின் விற்பனை மீது மேலும் தே.க.வ செலுத்தப்பட மாட்டாது.

**கொடுப்பனவுகள் ஏதாவது ஒரு இலங்கை வங்கிக் கிளையில் மேற்கொள்ளப்படலாம். தயவுகூர்ந்து காசோலையின் மறுபுறம் வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தையும் (TIN) குறிப்பிடவும்.**

**மேலதிக விபரங்களுக்காக தயவுசெய்து பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.**

| | | |
|---|---|---|
| தே.க.வரிக் கிளை | - | 011-2338721, 011-3009245, 011-3009304 |
| வரி செலுத்துநர் சேவைப்பிரிவு | - | 011-2338702, 011-3009040, 011-3009018 |
| செயலகக் கிளை | - | 011-2338570, 011-2338543, 011-2338635 |

Web: www.inlandrevenue.gov.lk

**தயவுசெய்து கொடுப்பனவை உரிய நேரத்தில் மேற்கொள்ளவும்**

# உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

| | |
|---|---|
| | வரி - சிறந்ததொரு எதிர்காலத்திற்காக |